செ.வெ.எண்:23/2019 நாள்:11.11.2019

**பத்திரிக்கைச் செய்தி**

சிவகங்கை மாவட்டம் முத்துப்பட்டியில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இரண்டாம் கட்டமாக அம்மா இருசக்கர வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு குறுகிய கால இலவச பயிற்சி துவங்கவுள்ளது. அதில் சேர சிவகங்கை ஒன்றியத்தை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பகுதி நேர பயிற்சியாக தினமும் மாலை 2 மணி முதல் 6 மணி வரை பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்கு வந்து செல்ல பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். பயிற்சியை நிறைவு செய்து தேர்ச்சி பெறுவோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர குறைந்தபட்சம் 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது 18 முதல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும். பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் வருகிற 25.11.2019-ம் தேதிக்குள் தங்களது கல்வி சான்று (TC/Marksheet), சாதிச்சான்று, ஆதார் கார்டு ஆகியவற்றின் 2 நகல்கள் மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட 3 புகைப்படங்களுடன் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய அலுவலக நாட்களில் நேரில் வந்து காலை 10.00 மணி முதல் 5.30 மணி வரை விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம் என சிவகங்கை அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் திரு.வி.வெங்கடகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

போன்: **99420 99481** மற்றும் **99448 62004.**

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**